**கோரளைபற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 03 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 19 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோரளைப்பற்று பற்று பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

பதவியை விட்டுச் சென்ற மற்றும் இளைப்பாறிச் சென்ற பத்து ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.131,679 கடன் மீதியை மரணப்பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாகக் 2013 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றது.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிதி நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டுக்கான வருமானம் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.10,734,838 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,843,123 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.5,891,715 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

**வீதவரிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134,158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 1989 ஆம் ஆண்டு தொடக்கம் இறுதி வரை வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.2 குத்தகைகள்

----------------

### (அ) பாசிக்குடா வாகனப் பாதுகாப்பு நிலையத்தை குத்தகைக்கு வழங்கல்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பாசிக்குடா கடற்கரை பகுதியில் வாகனத்தை நிறுத்தி வைக்கும் நிலையத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான கேள்வி நிபந்தனையின் பிரகாரம், கேள்வித் தொகையில் 50 சதவீதம் உடன் செலுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் மீளாய்வாண்டின் போது இந்நிலையத்தை குத்தகைக்கு பெற்றவரால் செலுத்தப்பட வேண்டிய ரூபா.648,000 தொகையில் ரூபா.200,000 மாத்திரமே 2014 சனவரி 20 இல் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 07 நாட்கள் மற்றும் 03 மாதங்களுக்கிடையில் செலுத்தப்பட வேண்டிய ரூபா.448,000 தவணைப் பணங்கள் இற்றைவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) இதேபோன்று கடந்த வருடத்தில் இந்நிலையத்தை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாக ஆகக் குறைந்த கேள்வித் தொகையாக ரூபா.1,600,000 தீர்மானிக்கப்பட்டு ரூபா.1,100,000 மாத்திரமே குத்தகைக்காரரிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதிப்பணமாகிய ரூபா.500,000 இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாசிக்குடா 01 ஆம் மற்றும் 02 ஆம் இலக்க ஆடைமாற்று நிலையங்களை குத்தகைக்கு வழங்கல்.

#### (i) 01 ஆம் இலக்க ஆடைமாற்று நிலையம்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

ஆடைமாற்று நிலையத்தை ரூபா.320,000 தொகைக்கு குத்தகைக்குப் பெற்றவர் கேள்வி நிபந்தனையின் படி கேள்வித் தொகையில் அரைப் பகுதியான ரூபா.160,000 தொகையை 2013 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய போதிலும் 2014 சனவரி 16 இல் ரூபா.80,000 தொகையை மாத்திரம் செலுத்தியிருந்தார்.

#### (ii) 02 ஆம் இலக்க ஆடைமாற்று நிலையம்

இந்த ஆடைமாற்று நிலையம் 2013 திசெம்பர் 31 இல் ஒரு பக்க நபருக்கு ரூபா.580,000 தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் கேள்விதாரர் 2014 சனவரி 13 இல் ரூபா.220,000 மாத்திரம் செலுத்தி குத்தகையை பெற்றிருந்த போதிலும், அவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.360,000 தொகையை சபை இதுவரை அறவிட்டிருக்கவில்லை.

(இ) பாசிக்குடா வாகன தரிப்பிடம் மற்றும் ஆடை மாற்றும் நிலையம் தொடர்பாக இரண்டு குத்தகைக்காரர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா.1,789,600 ஆன குத்தகைப் பணம் மூன்று வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அவற்றினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏனைய வருமானம்

உல்லாச விடுதியகம், உணவுச்சாலை மற்றும் உறையகம் என்பவை மீதான வருமான அறவீடு தொடர்பாக பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம், இலங்கை உல்லாச பிரயாணச் சபையில் பதிவு செய்யப்பட்டு பாசிக்குடா பிரதேசத்தில் இயங்கிவரும் ஒன்பது முன்னணி உல்லாச ஹோட்டல்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய உரிமத் தீர்வைக்கட்டணம் இற்றைவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

சபையினால் 1995 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ஊழியர்களின் ஓய்வூதியத்திட்டத்திற்கான பங்களிப்பு பணமாக ரூபா.2,037,203 தொகையான பங்களிப்பு பணத்தை செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதனைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு